சார்பு நீதிமன்றம், மேலூர்

நாள் :05.06.2025
வா.சா1.- செல்லம்மாள் க.பெ.துரைசாமி
O.S No. :124/2022
( சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

வழக்குரையில் காண விவரங்கள் அனைத்தும் நான்தான் வழக்கறிஞரிடம் தெரிவித்தேன். நான் பாகப்பிரிவினை வழக்கைத் தாக்கல் செய்துள்ளேன். 1989 முன்பாக நானும் என் சகோதரர்களும் எவ்வித கருத்துவேறுபாடு இல்லாமல் சுமூகமான முறையில் இருந்தோம் என்றால் சரிதான். 1989திற்கு பின்னிட்டு 2000 ஆண்டு வரை எனக்கும் எனது சகோதரர் சகோதரிகளுக்கு இடையே எல்லா நல்லுறவுகளிலும் பங்கெடுத்து ஒன்றாக வாழ்ந்து வந்தோம் என்றால் சரிதான். நான் என் தாயாரை நன்கு பராமரித்து வந்தேன். என் தாயார் எந்த விஷயம் என்றாலும் என்னிடம் கலந்தாலோசித்து முடிவு எடுப்பார் என்றால் சரிதான். சாட்சி மீண்டும் அவ்வாறு கலந்தாலோசனை செய்து முடிவு எடுக்கமாட்டார் என்று கூறுகிறார். என் தாயார் ராஜம்மாள் உயிருடன் இருக்கும் காலம் வரை என்னுடன் எந்த கருத்துவேறுபாடும் இல்லாமல் இருந்தார் என்றால் சரிதான். என் தாயார் எந்த விஷயம் செய்தாலும் என்னை கலந்தாலோசனை செய்யாமல் செய்யமாட்டார் என்றால் சரியல்ல. அவ்வாறு என் தாயார் என்னைக் கேட்காமல் தம்பிகளை மட்டும் கேட்டு என்ன காரியம் செய்தார் என்றால் எதுவும் செய்யவில்லை. வழக்குத் தாக்கல் செய்வதற்கு முன்பாக என் சகோதர சகோதரிகளிடம் பாகம் கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். வழக்கறிஞர் அறிவிப்பில் உள்ள விவரங்கள் அனைத்தும் என் தம்பி இந்த வழக்கின் 4ம் பிரதிவாதியான அய்யணன் சொல்லிதான் அனுப்பப்பட்டது என்றால் சரிதான்.

எனக்கு படிக்கத் தெரியாது. வேலாயுதம் வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு கொடுக்கப்பட்டு இந்த வழக்கில் வா.சா.ஆ.8 ஆக குறியீடுசெய்யப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ஆவணத்திற்கு பதில் அறிவிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது அதுதான் வா.சா.ஆ.11 என்றால் சரிதான். அதற்கான பதிலை நான் தெரிந்துகொண்டேன். 07.04.1989ம் ஆண்டு வழக்குச் சொத்துக்கள் முழுவதுமாக பாகமாகிவிட்டது என்றும் பாகவஸ்தி பத்திரமும் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்ற விவரத்தை பதில் அறிவிப்பில் கண்டு வழக்கறிஞர் கூறினாரா என்றால் இல்லை. வா.சா.ஆ.11 பதில் அறிவிப்பில் உள்ள விவரத்தை நான் வேறு நபர்களிடம் காட்டி விவரம் தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. செல்வமணி என்ற நபருக்கு மறு கிரயம் செய்யப்பட்ட விவரத்தை தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. 1989 முதல் வழக்குச்சொத்தை பாகம் செய்து பெற்ற பிறகு அவரவர் பாகச் சொத்தை அவரவர்கள் அனுபவித்து பின்னாளில் அதை பல்வேறு நபர்களுக்கு விற்பனை செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் 1ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையை நான் படித்துப் பார்த்தேனா என்றால் இல்லை. அதனுடைய விவரத்தை தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. எதிர் வழக்குரையில் உள்ள விவரம் தெரியாமலேயே நான் இந்த வழக்கை நடத்தி வந்தேனா என்றால் இல்லை. வழக்கு விவரங்கள் அனைத்தும் எனது சகோதரர் அய்யனுக்குத்தான் தெரியும். அய்யணன் சொல்லிதான் இந்த வழக்கை நடத்தி வருகிறேன். இந்த வழக்கைப் பற்றி எனக்கு தெரியாது என்றும் அதைப் பற்றிய முழு விவரம் எனது தம்பி 4ம் பிரதிவாதியான அய்யனுக்கு மட்டும் தான் தெரியும் என்றால் சரிதான். 1989 தேதியிட்ட பாகப் பத்திரத்தின் விவரத்தையும், 1992 ம் ஆண்டு ஏற்பட்ட கிரய ஆவணங்கள் பற்றி நான் தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. நான் 4ம் பிரதிவாதியின் தூண்டுதலின் பேரில் இந்த வழக்கை நடத்தி வருகிறேன்

என்றால் சரியல்ல. இந்த வழக்கில் செல்வமணி 3ம் தரப்பினருடைய சொத்துக்களை தேவையற்று சேர்த்து இருக்கிறேன் என்றும் அவர் நல்லெண்ணத்தின் அடிப்படையில் கிரயம் பெற்ற சொத்து என்பதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

(4ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை என்பதால் முடிக்கப்பட்டது.)

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.06.05 19:12:51 +0530

Sub Judge

Melur